திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம்: 01/2002

எனது இல: ஏ09/சுற்றறிக்கை,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
340, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு 03.
2002.01.16 ஆம் திகதி.

அனைத்து மேலதிக பதிவாளர் நாயகங்கள் /
மாவட்டச் செயலாளர்கள், வலயப் உதவிப் பதிவாளர் நாயகங்கள்,
மாவட்டப் பதிவாளர்கள், காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள்.

**பிறப்புச் சான்றிதழ் கோரும் படிவங்களுக்குப் பதிலாக**
**மரணச் சான்றிதழ் கோரும் படிவங்களை வெளியிடுவதைத் தடுத்தல்**

பிறப்புச் சான்றிதழ் கோரும் படிவங்களைக் கேட்கும் போது, மரணச் சான்றிதழ் கோரும் படிவங்கள் வழங்கப்படுவதாகவும், மரணச் சான்றிதழ் கோரும் படிவத்தில் “மரணம்“ எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தை “பிறப்பு“ என மாற்றி பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாகவும் கடந்த காலங்களில் பத்திரிக்கை வாயிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

02. இதன் காரணமாக திணைக்களத்தின் உத்தியோகபூர்வ பணிகள் குறித்துப் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதால், அந்த நிலையைத் தவிர்ப்பதற்காக இனிவரும் காலங்களில் பிறப்புச் சான்றிதழ் கோரும் படிவங்களுக்குப் பதிலாக மரணச் சான்றிதழ் கோரும் படிவங்களைப் பொதுமக்களுக்கு வழங்க வேண்டாம் என இத்தால் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

03. பிறப்புச் சான்றிதழ் கோரும் படிவங்கள் தேவைப்படும் போது, தேவையான படிவங்கள் குறித்துத் தலைமை அலுவலகத்தின் விநியோக (களஞ்சிய) பிரிவுக்குத் தெரியப்படுத்தி, அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவும்.

04. அதேபோல், பிறப்புச் சான்றிதழ் கோரும் படிவங்களுக்குத் தட்டுப்பாடு நிலவினால், அந்தப் படிவத்தின் மாதிரியை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைத்து, அந்த மாதிரியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட படிவத்தில் பிறப்புச் சான்றிதழ் கோரக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் இத்தால் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஒப்பம்)
எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பிரதிகள்: -
1. தலைமை அலுவலகத்தின் அனைத்துப் பதவிநிலை அதிகாரிகள்
2. கிளைப் பொறுப்பாளர் - விவாக, பிறப்பு மற்றும் மரணப் பிரிவு
3. கிளைப் பொறுப்பாளர் - விநியோகப் பிரிவு